# நீதி வேண்டி மன்னாரில் திரண்ட வடக்கு உறவுகள்





சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று நீதி கோரி மன்னாரில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்துக்கான பிரதான போராட்டம் இம்முறை மன்னாரில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகரில் உள்ள சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் நடைபெற்றது. 2 ➤


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை 30.08.2023 கதிர் 61



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


## காணாமற் போனோர் விடயத்தில் நிச்சயமற்ற தன்மை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம்!



காணாமற் போனோர் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காரணமாக இலங்கையில் பல குடும்பங்கள் துன்பங்களை அனுபவித்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச காணாமல் போனோர் தினத்தை முன்னிட்டு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர், வன்முறை சூழ்நிலைகள், பேரழிவுகள், மனிதாபிமான அவசர நிலைகள் மற்றும் இடம்பெயர்வு போன்றவற்றினால் உலகளாவிய 2 ➤

## “காலம் கடந்தும் எமக்குரிய தீர்வுகள் கிடைக்கவில்லை”

## மட்டக்களப்பில் உறவுகள் மாபெரும் போராட்டம்



சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் மட்டக்களப்பில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்துக்கான பிரதான நிகழ்வு இம்முறை 2 ➤

## யாழில் பெண் பொலிஸ் உத்தியோகஸ்தர் மீது பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட அதிகாரி!

யாழ்ப்பாணம், ஓக. 30

யாழ்ப்பாணம் பலாலி பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர் மீது, பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 26 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், மதுபோதையில் இருந்த குறித்த அதிகாரி தன்னிடம் தவறாக நடக்க முற்பட்டார் என பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படாதவாறு குறித்த பொலிஸ் அதிகாரி, காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (க)

## யாழ்.மாவட்ட காணிப் பதிவகம் முடங்கும் நிலையில் ஒரேயொருவர் மட்டுமே ஒருநாள் சேவைப் பணியில்



அறிவித்தல் - 24.08.2023

எமது அலுவலகத்தில் இரு அலுவலக உதவியாளர்கள் மட்டுமே கடமையாற்றி வரும் நிலையில் ஒருவர் மருத்துவ விடுமுறையில் இருப்பதால் ஒருவர் மட்டுமே சேவையில் இருப்பதால் துரித சேவைகளை கொண்டு நடாத்த இயலாத நிலையில் உள்ளோம். எனவே மறு அறிவித்தல் வரை துரித சேவைகள் இடம்பெற மாட்டாது என்பதை அறியத்தருகின்றேன். சாதாரண சேவைகள் மட்டும் வழமை போல இடம்பெறும்.

காணிப்பதிவாளர்,
யாழ்ப்பாணம்.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக யாழ்.மாவட்ட காணிப் பதிவகம் முடங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24ஆம் திகதி முதல் காணிப் பதிவகத்தில் ஒருநாள் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளமையால், பலரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட காணி பதிவகத்தில் இரு உத்தியோகஸ்தர்கள் கடமையாற்றி வந்த நிலையில் ஒருவர் சுகவீனம் காரணமாக விடுப்பில் உள்ளார். அதனால் ஒருவர் மாத்திரமே கடமைக்கு சமூகமளிப்பதனால் , கடந்த 24 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரையில் ஒருநாள் சேவைகள் இடை நிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடமையில் இருக்கும் ஒரு உத்தியோகஸ்தருக்கு வேலைப் பளு அதிகரித்துள்ள நிலையில், விடுப்பில் உள்ளவருக்கு மாற்றீடாக ஓர் உத்தியோகஸ்தரை நியமிக்க இதுவரை 2 ➤



## செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா

ஈழத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா இன்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் ஒகஸ்ட் 16 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 2 ➤

# யாழ்ப்பாணத்திலும் உறவுகள் போராட்டம்

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டப் பேரணியொன்றை யாழ்ப்பாணத்தில் இன்று முன்னெடுத்தனர்.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் யாழ் முனியப்பர் கோவிலடிவரை பேரணியாகச் சென்று நிறைவுபெற்றது.

# மெனிங்கோகோகஸ் மூளைக்காய்ச்சல் கொழும்பில் இனங்கண்ட நோயாளி

கொழும்பு, ஒக. 30

காலி சிறைச்சாலையில் பல கைதிகளின் மரணத் திற்கு காரணமான மெனிங்கோகோகஸ் மூளைக் காய்ச்சல் பக்டீரியா நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நோயாளி ஜா-எல பிரதேசத்தில் வசிக்கும் 49 வயதுடையவர் எனவும், இரத்மலானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணிபுரிபவர் எனவும் தெரியவந்துள்ளது.

சுகயீனம் காரணமாக ஜெனரல் சேர் ஜோன் கொத் தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட அவர், சில மருத்துவ பரி சோதனைகள் மற்றும் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு பரிந்துரைக் கப்பட்டதாக இரத்மலானை சுகாதார வைத்திய அதி காரி வைத்தியர் ஜே.எம்.குணதிலக்க தெரிவித்துள் ளார்.

குறித்த நபருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த சுமார் 30 பேர் அவரது பணியிடத்தில் பரிசோதிக் கப்பட்டு அவர்களுக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் குணதிலக்க மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், மெனிங்கோகோகஸ் பாக்டீரி யாவால் பாதிக்கப்பட்ட ஒருவரையாவது அடையாளம் காண்பது மிகவும் ஆபத்தானது என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (த)

## காணாமல் போனோர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியில் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரி வித்துள்ளது.

காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கின் றார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்பது தொடர்பாக தெளிவற்ற நிலையில் வாழும் குடும்பங்களுக்கு வேத னையும் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்துவ தாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள், அவர்க ளின் உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்வது மிகவும் அவசியமானது எனவும் அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பெரும்பாலும் காணாமல் போனவர்கள் குடும் பத்தை ஆதரிப்பவராக இருக்கின்ற நிலையில், அவர்கள் இல்லாதமையானது அவர்களின் குடும்பங்களின் பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாக சவால்களை அதிகரிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதனை அறிய மக்களுக்கு உரிமை உண்டு எனவும் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், காணாமல் போனவர்களின் நிலை மற்றும் இருப்பிடம் குறித்து கண்டறியும் முயற்சிகளுக்கு தகவல்கள் மற்றும் உதவிகளை வழங்குவதற்கு அதி காரிகள் கடமைப்பட்டுள்ளனர் எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. (க)

## யாழ் மாவட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்க-ப்படுகிறது.

அதேவேளை, குறித்த அலுவலகத்தில் வெளி-மாகாணங்களைச் சேர்ந்த 6 உத்தியோகஸ்தர்கள் கடமையில் இருந்த நிலையில், அரசியல் செல்வா-க்குகளைப் பயன்படுத்தி அவர்கள் தமது சொந்த மா-காணங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். அந்த வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்பட-ாமல் இருந்தமையால் இரு உத்தியோகஸ்தர்களே கடமையாற்றி வந்தனர்.

தற்போதைய சூழலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலரும் வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முயன்று வருகி-ன்றனர். அதற்காகக் காணி உறுதி மாற்றங்களுக்கு அதிகளவானோர் விண்ணப்பிக்கின்றனர். அவர்கள் ஒருநாள் சேவையில் அதனைப் பெறவே விரும்புக-ின்றனர். சாதாரண சேவை மூலம் பெறுவதாயின் சுமார் ஒரு மாத காலப் பகுதிக்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அதேபோன்று, தற்போது புலம்பெயர் நாடுக-ளில் இருந்தும் பெரும்பாலானோர் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாண-த்தில் உள்ள தமது காணிகளைத் தாம் நிற்கும் கால பகுதியில் உரிமம் மாற்றம் செய்வதற்கும் ஒருநாள் சேவையையே விரும்புகின்றனர்.

அந்த நிலையில் சுமார் ஒருவார காலமாக ஒருந-ாள் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளமையால் பலரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

உடனடியாக யாழ்.மாவட்ட காணிப்பதிவுத் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பலரும் கோரியுள்ளனர். (O1)

## செல்வச்சந்நிதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை தேர் திருவிழா இடம்பெற்றதோடு, நாளை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. இன்றைய நாள் தேர்த் திருவிழாவில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (O1)

## "காலம் கடந்தும் எமக்குரிய ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றது.

இன்று காலை 10 மணியளவில் மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்தில் இருந்து ஆரம்பமான இந்த மா பெரும் கவனயீர்ப்புப் போராட்டப் பேரணி நகரின் பிரதான வீதிகள் ஊடாகச் சென்று காந்தி பூங்காவை அடைந்தது.

இந்தப் பேரணியில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இருந்து பெருந்தொகையான காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல்போனவர்களின் புகைப்படங்கள் மற்றும் பதாகைகளை ஏந்தியவாறு கலந்துகொண்டனர்.

"காலம் கடந்தும் எமக்குரிய தீர்வுகள் கிடைக்க வில்லை" எனத் தெரிவித்தும், "எங்கே எங்கே காணா மல்போன எமது உறவுகள் எங்கே?" எனக் கோஷங் களை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"எமது உறவுகள் எமக்கு வேண்டும்", "மதவாதம் வேண்டாம்" எனக் கோஷங்களை எழுப்பியும் இந்தப் பேரணியில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் இந்நாள் - முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலி கொடவின் மனைவி, பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (O3)

## நீதி வேண்டி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட் டோரின் உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த மாபெ-ரும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று காலை 10.30 மணியளவில் மன்னார் நகரில் உள்ள சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தில் உள்ள மன்னார், வவுனியா, கிளிநொச்சி , முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 5 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்துகொண்டனர்.

இலங்கை அரசின் முப்படைகளாலும், துணை ஆயுதக்குழுக்களாலும் போருக்கு முன்பும் போருக்குப் பின்பும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி கோரி மன்னார் சதொச மனிதப் புதைகுழிக்கு அருகாமையில் இருந்து மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி ஆரம்பமாகியது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், பொது அமைப்பினர், சிவில் அமைப்பினர், சட்டத்தரணிகள், அருட்தந்தையர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருந்திரளானோர் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்.

மன்னார் சதொச மனிதப் புதைகுழிக்கு அருகா மையில் இருந்து ஆரம்பமான பேரணி மன்னார் சுற்று வட்ட பாதை ஊடாக ஓ.எம்.பி. அலுவலக வீதியைச் சென்றடைந்தது. பின்னர் அங்கிருந்து வைத்தியசாலை வீதி ஊடாக மன்னார் பொது விளையாட்டு மைதா னத்தைச் சென்றடைந்தது.

இதில் கலந்துகொண்டவர்கள் கறுப்புக் கொடி களை ஏந்தி காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் புகைப்படங்களைச் சுமந்து பல்வேறு கோஷங்களை விண்ணதிர எழுப்பினர். பின்னர் காணாமல் ஆக்கப் பட்டோரின் உறவுகளால் கருத்துக்கள் வெளியிடப்பட்ட தோடு, மகஜர் பொது வெளியில் வாசிக்கப்பட்டது.

அந்த மகஜரை மனித உரிமைகள் செயற்பாட்டா ளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தலைமையிலான அருட்தந்தையர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கையளித்தனர்.

இந்தப் போராட்டப் பேரணியில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், நானாட் டான் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி, முன்னாள் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராசா நிரோஷ், மன்னார் நகர முன்னாள் பிதா ஞானப்பிரகாசம் ஜெராட், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட அரசி யல் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (O1, க)

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
**maalaikkathir@gmail.com**



# வடக்கு கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் - அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



வடக்கு கிழக்கில் நீண்ட காலமாக பணியற்றி வருகின்ற தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புக் கொண்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சுமார் 60 ஆசிரியர்களும் கிழக்கு மாகாணத்தில் சுமார் 187 ஆசிரியர்களும் நீண்டகாலமாக நிரந்தர நியமனம் இன்றி தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

குறித்த தொண்டர் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து, தமக்கான நிரந்தர நியமத்தை பெற்றுத் தருமாறு கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

அதுதொடர்பாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் பிரஸ்தாபித்ததுடன் நிரந்தர நியமனங்கள் வழக்கப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்திய நிலையில், அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைக்கு புதிய நிருவாகத் தெரிவு இன்று



இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் பொதுக்கூட்டமும், புதிய நிருவாகத் தெரிவும் இன்றைய தினம், கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில், கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையான அறிவகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் நான்கு பிரதேசக் கிளைகளினதும் நிருவாகிகள், மாவட்ட மாதர் முன்னணி மற்றும் வாலிபர் முன்னணி நிருவாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தின்போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, கிளிநொச்சி மாவட்டக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம்சிறீதரனும், செயலாளராக திரு. வீரவாகு விஜயகுமாரும், பொருளாளராக செல்வி அன்பழகி செல்வரட்ணமும், துணைத்தலைவராக வடக்கு மாகாண சபையின் மேனாள் கல்வி அமைச்சர் திரு. தம்பிராஜா குருகுலராஜாவும், துணைச் செயலாளராக கரைச்சிப் பிரதேச சபையின் மேனாள் தவிசாளர் திரு. அருணாசலம் வேழமாலிகிதனும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக கலைவாணி சிறீகாந்தன், குணலக்சுமி குலவீரசிங்கம், சிவயோகலட்சுமி சந்திரபோஸ், சுபாதா வேலாயுதபிள்ளை, உதயராணி சத்தியசீலன், பரமலிங்கம் பாஸ்கரன், சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், கறுப்பையா ஜெயக்குமார், சின்னையா தவபாலன், சுப்பிரமணியம் சுரேன் ஆகிய பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இத் தெரிவுக் கூட்டத்தை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நிருவாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் நெறிப்படுத்தி நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (02)

## புதுக்காட்டு ஐயப்பன் ஆலயத்தின் மகா கும்பாபிசேக பெருவிழா



கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் புதுக்காட்டு பகுதியில் அமைந்து புதிதாக அமைக்கப்பட்ட ஐயப்பன் ஆலயத்தின் ராஜகோபுரம் மற்றும் மூலமூரத்தி பரிபாலன மூர்த்திகளுாக்கன மாகா கும்பாபிசேகப் பெருவிழா இன்றைய தினம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கும்பங்கள் யானை மீது உள் வீதி, வெளி வீதி உலாவாகக் கொண்டுவரப்பட்டு, ஐயப்பன் சுவாமிக்கு கும்பாபிசேகம் செய்யப்பட்டது . (02)



# காற்று மாசுபாட்டினால் உயிராபத்து! இந்தியர்களுடைய ஆயுள் குறைகிறது



காற்று மாசுபாடு காரணமாக, இந்தியர்களின் வாழ்நாள் எதிர்பார்க்கப்பட்டதைவிட, சராசரியாக 5.3 ஆண்டுகள் குறைவதாக சிகாகோ பல்கலைக்கழக ஆய்வு முடிவொன்று தெரிவிக்கிறது.

உலகிலேயே காற்று மாசுபாட்டுக்குப் பெயர் போன நகரமாக விளங்கும் இந்தியத் தலைநகரம் புது டில்லியில் இருப்பவர்களின் சராசரி வாழ்நாள் 11.9 ஆண்டுகள் குறைவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் தரநிலைகளுடன் ஒப்பிட்டு, சிகாகோ பல்கலைக்கழகத்தின் எரிசக்திக் கொள்கை மையத்தால் வெளியிடப்பட்ட புதுப்பிக்கப்பட்ட காற்றுத் தர வாழ்க்கைக் குறியீடு, ஒரு கன மீற்றருக்கு 5 மைக்ரோகிராம்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட தரத்துக்கு அமைவாக இந்தியாவின் காற்று மாசு சீரடையாவிட்டால், சராசரியாக, இந்தியர்களின் வாழ்நாள் 1.8 ஆண்டுகள் குறையும் என்றும், புது டில்லி வாழ் மக்களின் வாழ்நாள் 8.5 ஆண்டுகள் குறையும் என்றும் அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார நிறுவனம் நிர்ணயித்திருக்கும் காற்றுத் தரத்துக்குக் கீழே காற்று மாசால் பாதிக்கப்பட்டிருக்கும் இந்தியாவின் பகுதிகளில் 130 கோடி மக்கள் வசிக்கிறார்கள் என்றும், நாட்டின் காற்றின் தர நிர்ணய அளவை விடக் குறைவான பகுதிகளில் 67.4 சதவீத மக்கள் வசிக்கிறார்கள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மனிதர்களுக்கு காற்று மாசு ஏற்படுத்தும் தீங்கானது, புகைபிடித்தலை விடவும் மோசமானது என்றும், மதுப் பாவனை மற்றும் சுகாதாரமற்ற தண்ணீரைக் குடிப்பதை விட 3 மடங்கும், விபத்துகளில் பலியாகும் எண்ணிக்கையை விட 5 மடங்கும், எய்ட்ஸ் போன்ற நோய்களில் பலியாவதைவிட 7 மடங்கும் அதிகமாக இருக்கும் என்று அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (04)

# பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து பொதுமக்கள் 25 பேர் விடுவிப்பு!

## நைஜீரிய ராணுவம் அறிவித்தது



நைஜீரியாவில் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து பொதுமக்கள் 25 பேரை பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து நைஜீரிய ராணுவம் உத்தியோகபூர்வமாகவும் அறிவித்துள்ளது.

போர்னோ மாகாணத்தின் குவோஸா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து முதல் கட்டமாக 14 பேர் சனிக்கிழமையும், 11 பேர் ஞாயிற்றுக்கிழமையும் மீட்கப்பட்டனர்.

பயங்கரவாதிகள் பதுங்கியிருந்த இடங்கள் போர்னோ மாகாணத்தின் தலைநகரிலிருந்து 130 கி.மீ. தொலைவில் உள்ளன எனவும், மீட்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் புகைப்படங்களையும் ராணுவம் வெளியிட்டது. அதில், அவர்கள் மிகவும் பலவீனமாக தென்படுவதால், நீண்டகாலமாக அவர்கள் கைதிகளாக வைக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹறாம் என்ற பயங்கரவாத அமைப்பு கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து அரசுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தி வருகிறது.

தற்போது பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துள்ள இந்த அமைப்பின் ஒரு பிரிவு, பொதுமக்களைக் கடத்திச் சென்று பணம் கேட்டு மிரட்டுவது போன்ற செயல்களிலும் ஈடுபடுகிறது என்று குற்றச்சாட்டப்படுகிறது.

போகோ ஹறாம் அமைப்பின் தாக்குதலில் இதுவரை 35,000 பேர் உயிரிழந்து, 21 லட்சம் பேர் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கிறது.

இந்த வன்முறைகள் அண்டை நாடுகளான கமரூன், சாட், நைஜருக்கும் பரவியுள்ளதாக நைஜீரியாவில் உள்ள ஐ.நா. அமைப்பு அறிக்கையிட்டுள்ளது. (04)

# சூரியனை ஆராய்வதற்கான இந்தியாவின் ஆதித்யா எல் -1 விண்கல ஒத்திகை நிறைவு!

சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியாவால் அனுப்பப்படவிருக்கும் ஆதித்யா எல்-1 விண்கலத்தை விண்ணில் செலுத்துவதற்கான ஒத்திகை நிறைவடைந்ததாக இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ நேற்று அறிவித்துள்ளது.

கடந்த மாதம் சந்திரயான் 3 விண்கலத்தில் அனுப்பப்பட்ட விக்ரம் லாலேண்டர், நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கி சாதனை படைத்தது. நிலவின் தென் துருவப் பகுதியில் 'விக்ரம்' லாண்டரும், 'பிரக்யான்' ரோவரும் தொடர்ந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

அந்த ஆய்வுகள் நிலவு சார்ந்த புதிய தரவுகளை வழங்கி வருகின்றன. அது எதிர்காலத் திட்டங்களுக்குப் பெரும் பலன் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சூரியனை ஆய்வு செய்வதற்காக 'ஆதித்யா-எல்1' விண்கலத்தை இஸ்ரோ செப்டம்பர் இரண்டாம் திகதி முற்பகல் 11.50 க்கு விண்ணில் செலுத்தவுள்ளது.



இதற்கான ஒத்திகை வெற்றிகரமாக நிறைவடைந்ததாக இஸ்ரோ அறிவித்துள்ள நிலையில், வரும் சனிக்கிழமை ஆதித்யா எல்-1 விண்ணில் பாய்வது உறுதியாகியுள்ளது.

சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்தியா அனுப்பும் முதல் விண்கலம் இதுவாகும். (04)



# உக்ரைனுக்கு மேலும் 250 மில்லியன் ராணுவ உதவி - அமெரிக்கா தகவல்

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் தனது படைகளை அனுப்பி தாக்குதல் நடத்தத் தொடங்கியது. இதற்கு உக்ரைன் ராணுவம் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இதற்கிடையில், இந்தப் போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவும் ஆதரவு தெரிவித்து வருகின்றன. அத்தோடு, உக்ரைனுக்கு பொருளாதார மற்றும் ஆயுத உதவிகளையும் வழங்கி வருகின்றன.

மேற்கத்திய நாடுகளின் உதவியோடு உக்ரைன் தொடர்ந்து ரஷ்யாவிற்கு எதிராக போரிட்டு வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு மேலும் 250 மில்லியன் டொலர்கள் மதிப்பிலான ராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. ரஷ்யா போர் தொடுத்தது முதல் உக்ரைனுக்கு இதுவரை அமெரிக்கா 10 பில்லியன் டொலருக்கும் அதிகமான பொருளாதார மற்றும் ராணுவ உதவிகளை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (04)

# இம்ரான்கானின் சிறைத்தண்டனைக் காலம் விடுவிப்பு உத்தரவின் பின்னும் தொடர்கிறது

பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கெட் வீரரான இம்ரான்கான் கடந்த 2018 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, அந்த நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றார். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் எதிர்க் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இம்ரான்கான் அரசு கவிழ்ந்தது. அவர் பிரதமர் பதவியை இழந்தார்.

அதனைத் தொடர்ந்து ஊழல், மோசடியில் ஈடுபட்டதாக இம்ரான்கான் மீது நூறுக்கும் அதிகமான வழக்குகள் தொடரப்பட்டன. அந்த வகையில், இம்ரான்கான் தன்னுடைய பதவிக் காலத்தில் வெளிநாட்டுத் தலைவர்களிடம் இருந்து பெற்ற பரிசுப் பொருட்களை அரசாங்கக் கருவூலமான தோஷகானாவில் ஒப்படைக்காமல் முறைகேடாக விற்று, சொத்து சேர்த்ததாக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

தோஷகானா வழக்கு என்று அழைக்கப்படும் இந்த வழக்கை விசாரித்த இஸ்லாமாபாத் மாவட்ட நீதிமன்றம் இம்ரான்கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து கடந்த ஐந்தாம் திகதி தீர்ப்பு அளித்தது. இதையடுத்து, இம்ரான்கான் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்தத் தீர்ப்பைத் தொடர்ந்து, இம்ரான்கான் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இதனிடையே, தோஷகானா வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து இம்ரான்கான் தரப்பில் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இருதரப்பு வாதங்களை கேட்டறிந்த நீதிபதிகள் நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு அளித்தனர். அதன்படி இம்ரான்கானுக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து மாவட்ட அமர்வு நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

மேலும், இம்ரான்கானை உடனடியாக விடுவிக்குமாறு சிறைத்துறைக்கும் நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர். இந்தச் சூழலில், அடுத்த சில மணிநேரத்தில் இம்ரான்கான் இன்னொரு வழக்கில் கைது செய்யப்பட்டார்.

இம்ரான்கான் பிரதமராக இருந்தபோது, முக்கிய கூட்டங்களுக்கும் அரச உயரதிகாரிகளுடன் பேசுவதற்குமான சைப்பர் எனப்படும் தொடர்புச் சேவையை தனது சொந்தக் கட்சி மாநாட்டில் பயன்படுத்தியதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு, இதுதொடர்பாக இம்ரான் கானுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அதில் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால், ஒரு வழக்கில் விடுவிப்பதற்கான உத்தரவு வழங்கப்பட்டும் அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், இன்று காலை அவர் சைப்பர் வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். இதனைத்தொடர்ந்து நடந்த விசாரணையில் அவரது நீதிமன்றக் காவலை செப்டம்பர் 13ஆம் திகதி வரை நீடித்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனால், இம்ரான்கானின் சிறைத் தண்டனை தொடருகிறது. (04)

# சுகாதார நிறுவனங்களில் பால் ரீதியான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்பதற்கான விசேட பயிற்சிநெறி



(நூருல் ஹுதா உமர்)

"இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் அவர்களின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக, கல்முனை பிராந்திய உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.நௌபல் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களுக்கான பால்நிலை சமத்துவம் தொடர்பான விசேட பயிற்சி நெறி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் விரிவுரை மண்டபத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரபல வளவாளரும் பிராந்திய உளநலப்பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான டொக்டர் எம்.ஜே. நௌபல், உளமருத்துவ சமூக உத்தியோகத்தர் எம்.ஆர்.எம். ஹமீம் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த நிகழ்வில் விரிவுரைகளை நடத்தியதுடன் பங்குபற்றுனர்களுடன் கலந்தாலோசனைகளிலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித் கலந்து கொண்டிருந்ததுடன் விசேட கலந்தாலோசனையிலும் ஈடுபட்டிருந்தார். இந்நிகழ்வில் விசேடமாக வேலைத்தளங்களில் பால்நிலை அசமத்துவங்களை எதிர்கொள்ளுதல் ஓர் உளவியல் கண்ணோட்டம் என்ற தலைப்பிலும் பெண்களுக்கான சட்ட ரீதியான பாதுகாப்பு பால் ரீதியாக பாரபட்சம் காட்டப்படுதலில் இருந்து விடுகை பெறுதல் போன்ற பல்வேறு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கடற்கரைகளில் கரை ஒதுங்கிய கடல் ஆமைகள் நீருக்கடியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமா?



இலங்கையைச் சுற்றியுள்ள கடற்கரைகளில் கரை ஒதுங்கிய கடல் ஆமைகள் நீருக்கடியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜா-எல முதல் பாணந்துறை வரையான கரையோரங்களில் மொத்தம் 25 ஆமைகளின் உடலங்களும் 2 உயிருள்ள ஆமைகளும் காணப்பட்டதாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடற்கரையில் உள்ள கடல் ஆமைகளின் ஓடுகளில் கடுமையான வெடிப்பு காணப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், சில ஆமைகள் இறந்ததற்கு மூளையில் ஏற்பட்ட பாதிப்பே காரணம் என வனவிலங்கு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

சில தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட வெடி பொருட்களால் இந்த வெடிப்பு ஏற்பட்டதா? என்பதை கண்டறிய வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சம்பந்தப்பட்ட சடலங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் குறித்த ஆமைகளின் மரணத்திற்கான சரியான காரணம் விரைவில் நிறுவப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக நான்கு நிறுவனங்கள் கூட்டு விசாரணையைத் தொடங்கியுள்ளதுடன், அடுத்த சில நாட்களுக்குள் அறிக்கையை விரைவாக சமர்ப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த)

# எம்.வி.எக்ஸ்ப்ரஸ் உல்லாசக் கப்பலில் இருந்த சுகயீனமடைந்த இந்தியப் பிரஜை மீட்பு

இலங்கையின் கிழக்குக் கடற்கரையில் நேற்றைய தினம் எம்.வி.எக்ஸ்ப்ரஸ் என்ற உல்லாசக் கப்பலில் இருந்த சுகயீனமடைந்த இந்தியப் பிரஜை ஒருவரைக் கரைக்குக் கொண்டு வருவதற்கு இலங்கை கடற்படையினர் உதவியிருந்தனர்.

குறித்த நபர் கரைக்குக் கொண்டு வரப்பட்டதும், சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

குறித்த கப்பலின் கப்டன், கடற்படைத் தலைமையகத்தில் அமைந்துள்ள கொழும்பு கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்திற்கு ஒரு செய்தியை அனுப்பி, நோயாளியை சிகிச்சைக்காக கரைக்கு மாற்ற உதவி கோரியுள்ளார்.

அவசர நிலைமைக்கு பதிலளித்த கடற்படை, நோயாளியை கரைக்கு கொண்டு வருவதற்காக கிழக்கு கடற்படை கட்டளை பீடத்துடன் இணைக்கப்பட்ட பி 491 விரைவு தாக்குதல் கப்பலை குறித்த கடல் பகுதிக்கு அனுப்பியுள்ளது.

நோயாளியை கடற்படைக் கப்பலுக்குள் மீட்டெடுத்த பின்னர், கப்பலில் இருந்த நோயாளிக்கு முக்கியமான முதலுதவி அளித்துக்கொண்டே, திருகோணமலை துறைமுகத்துக்குச் சென்று, சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (05)

# சூப்பர் மூன் எனப்படும் பெரு நிலவு இன்று வானில் தெரியுமென தகவல்



இயற்கையின் பல அதிசயங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகின்ற ப்ளூ மூன் அல்லது சூப்பர் மூன் எனப்படும் பெரு நிலவு இன்று வானில் தெரியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று பௌர்ணமி நாள் என்பதால், வழக்கமான அளவைக் காட்டிலும் நிலவு சற்று பெரிதாகவும், இன்னும் வெளிச்சமாகவும் வானில் தோன்றும். இது போன்ற நாள்களில் தன்னுடைய சுற்றப்பாதையில் பூமிக்கு முன்னெப்போதையும்விட நெருக்கமாக நிலவு வருகிறது. இன்று மேலும் ஒரு சிறப்பாக, இந்த நிலவு சனிக் கிரகத்துக்கும் சற்று நெருக்கமாக வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

பூமியைச் சுற்றிக் கொண்டிருக்கும் நிலவானது, சில நேரங்களில் தனது புவி வட்டப் பாதையில், நிலவுக்கு மிக அருகாமையில் வரும்போது இந்த பெரு நிலவு என்ற இயற்கையின் பேரதிசயம் நிகழ்கிறது.

பூமியில் இருந்து 4,05,500 கி.மீ. தொலைவில் இருக்கும் நிலவானது இன்று 3,57,344 கிலோ மீற்றர் தொலைவுக்கு சற்று நெருங்கி வரும். இதனால், வழக்கமான அளவை விடவும் பெரிதாகவும் பிரகாசமாகவும் நிலவு ஜொலிக்கவிருக்கிறது.

ப்ளூ மூன் எனப்படுவது, அதன் நிறத்தைக் கொண்டு கூறப்படுவதில்லை. மாறாக, ஒரே மாதத்தில் இரண்டு பௌர்ணமிகள் வரும் நாள்களைத்தான் ப்ளூ மூன் என்கிறார்கள்.

இலங்கை நேரப்படி 9.30 க்கு, நிலவு பெரிதாகவும், சற்று பிரசாகமாகவும் தெரியும் எனவும், சரியாக அந்த நேரத்தில் அதனைப் பார்க்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04)



# செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழா புகைப்படத் தொகுப்பு















# இலங்கையின் பொருளாதாரம் முழுமையாக மறுசீரமைக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




"இலங்கையின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க எதிர்பார்த்துள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகளின் பாதையைப் பின்பற்றி, போட்டித்தன்மை மிக்க, புதிய சந்தை வாய்ப்புகளையும், வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்கத் திட்டமிட்டுள்ளோம்."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் நிலையான அபிவிருத்தி நோக்கு நிலை" என்ற தலைப்பில் அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிபுணர் மாநாட்டில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை இனிமேலும் ஏனைய நாடுகளுக்கு சுமையாக இருக்கக் கூடாது என்றும், பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் செயற்பட்டமை போன்று, உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி ஒரு நாடாக நாமும் தனித்து முன்னேற முயற்சிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் நாம் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இங்கு குறிப்பிடப்பட்டது. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அழைப்பு விடுத்துள்ள கலந்துரையாடலில் நானும் பங்கேற்கின்றேன். நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை நாம் இப்போது அடைந்து வருவதோடு, அதன் பிரதிபலன்களும் பாராட்டுக்குரியவை.

ஆனால், இன்று உலகம் பல மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது. நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கு கூடுதலாக, காலநிலை மாற்றத்தின் பொதுவான பிரச்சினைகளை கலந்துரையாட பரிஸ் காலநிலை மாநாடு மற்றும் கிளாஸ்கோ மாநாடு ஆகியவை நடத்தப்படுகின்றன.

இது தவிர, உலகம் முழுவதும் பரவிய கொவிட் தொற்றின் பாதிப்பையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கொவிட் 19 தொற்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடாக இலங்கை உள்ளதுடன், எமது நாட்டின் பொருளாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. மேலும், அனைத்து நாடுகளும் இதனால் பாதிக்கப்பட்டதோடு, இதன் மூலம் உலகப் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டதையும் நாம் அறிவோம்.

ஐரோப்பாவின் பொருளாதாரம் இன்றளவிலும் சரிவை எதிர்கொள்கிறது. மறுமுனையில் பொருளாதாரத்தில் சரிவு ஏற்பட்டிருந்தாலும், அதிர்ஷ்டவசமாக அமெரிக்கா இருந்த நிலையை விடவும் தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டுவருகிறது. சீனா இன்னும் மீண்டு வரவில்லை. எனவே, உலகப் பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டுள்ளதுடன், அதனால் பெரும் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள நேரிட்டுள்ளது.

அவ்வாறென்றால், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு நாம் எவ்வாறு நிதியைப் பெற்றுக்கொள்வது?

அத்தோடு, காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளைத் தணிக்கவும் உலகளாவிய நிதிக் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நிதி நிவாரணங்களை பெற்றுக்கொள்ளும் முறைமைகளை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். அந்த இலக்குகளை அடைவதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

2030ஆம் ஆண்டுக்குள் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும், 2050ஆம் ஆண்டாகும் போது காலநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடைவதற்குத் தேவையான நிகழ்ச்சி நிரலை துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கும் அனைத்து நாடுகளின் ஆதரவையும் ஐ.நா. பொதுச்செயலாளர் அண்மையில் கோரியிருந்தார்.

இவை அனைத்திற்கும் தேவையான வளங்களைக் கண்டறியும் திறன் நமக்கு இருக்க வேண்டும். இதற்கு அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இருக்கும் நிதி போதுமானதாக இருக்கும் என்று சிலர் நினைத்தனர். ஆனால், அந்த நாடுகள் அதற்கு முன்வரவில்லை. மேலும், தற்போது அவர்களிடம் அதற்கான வளங்கள் போதுமானதாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அது தொடர்பாகவும் கவனம் செலுத்தி, இந்த நிதி மூலங்களைக் கண்டறிவது குறித்தும் சிந்திக்க வேண்டும்.

மேலும், இதற்காக, பலதரப்பு அபிவிருத்தி வங்கிகளிடமிருந்து மட்டுமன்றி, தனியார் துறையிலிருந்தும் நிதி நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கை கொண்டுள்ளோம்.

அந்த வகையில், முதலீடுகளுக்கும் பிணைமுறிகளை வெளியிடுவதற்குமான வாய்ப்புக்களை தனியார் துறைக்கு வழங்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால், தற்போதைய நிலைவரப்படி பல நாடுகள் தொடர்பாக இது வெற்றி பெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளதுடன், தற்போதுள்ள திறன்கள் முதலீட்டுக்கு ஏற்றதாக இல்லை என தனியார் துறையினர் நினைக்க வாய்ப்புள்ளது. இந்த வாய்ப்பிற்காக நாம் மூன்றில் ஒரு பங்கை ஒதுக்கினால், மீதமுள்ள தொகையை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

2019 இல் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைய, மொத்த தேசிய உற்பத்தியில் 9 சதவீதத்தை மாத்திரம் வைத்திருப்பதே எமது தேவையாக இருந்தது. ஆனால் தற்போது, இந்தப் பின்னணியிலும், காலநிலை மாற்ற இலக்குகளுக்காக நாம் நிதியை ஒதுக்க வேண்டியுள்ளது.





இலங்கை எதிர்கொண்ட கடன் நெருக்கடியின் விளைவாக, இந்நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாக மறுசீரமைக்க நாங்கள் எதிர்பார்ப்பதோடு, அதற்கான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்து வருகின்றோம். அதற்காக தாய்லாந்து, இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் பின்பற்றிய பாதை குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளதோடு, இதன்போது உயர் போட்டித்தன்மையுடைய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக எம்மால் மாற முடியும் என்றும் நம்புகிறோம்.

நாம் தொடர்ந்தும் முன்பு இருந்தது போன்று சிறிய பொருளாதாரமாக செயல்பட முடியாது. நாம் நமது பொருளாதாரத்தை விஸ்தரிக்க வேண்டும். இதற்காக புதிய தொழிநுட்ப முறைகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும், இதற்குத் தேவையான வெளிநாட்டு முதலீடு மற்றும் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், மற்ற நாடுகளுக்கு நாம் சுமையாக இருக்கக்கூடாது. ஒரு நாடாக, பிற நாடுகளின் உதவியைப் பெற நாம் இனிமேலும் நினைக்கக் கூடாது. நம் நாட்டின் முன்னேற்றத்தை நாமே ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். உலகின் பல நாடுகள் அதைச் செய்துள்ளதோடு, இவ்விடயத்தில், போரினால் முற்றாக அழிந்த வியட்நாமை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாடு இந்து மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது. எனவே, எமக்கு பொருளாதார வளர்ச்சியை உருவாக்க பல வாய்ப்புகள் உள்ளன. நாம் இருக்கும் கிழக்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில், இன்று பரவலான வளர்ச்சி ஏற்பட்டு வருவதை உங்களால் பார்க்க முடியும்.

இந்தியா இன்று பொருளாதார ரீதியில் வலுவடைந்து வருவதோடு, இந்து சமுத்திரப் பிராந்தியம், எதிர்காலத்தில் உயர் பொருளாதார வளர்ச்சிப் பிராந்தியமாக உருவெடுக்கும். தற்போது நாம் அனைவரும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவது, காலநிலை மாற்ற பாதிப்பைத் தணிப்பது மற்றும் உலகளாவிய கடன் நெருக்கடி ஆகியவை தொடர்பாக மதிப்பாய்வு செய்ய வேண்டிய நேரம் இது என்று கூற வேண்டும்.

நாம் அதிலிருந்து விலகாமல், இதற்காக கூட்டாகவும் குழுவாகவும் செயல்பட வேண்டும். அதற்காக நாம் ஒரு அணியாக புதிய மூலோபாயங்கள் ஊடாக முன்னோக்கிச் செல்வோம் என்று நான் அனைவரையும் அழைக்கின்றேன்." - என்றார்.

நிலையான அபிவிருத்திச் சபை இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நிலையான அபிவிருத்திக்கான சபையின் பணிப்பாளர் நாயகம் சமீந்திர சபரமாது, ஆசிய மற்றும் பசுபிக் வலய சமூக பொருளாதார ஆணைக்குழுவின் தகவல் பிரதானி ஆர்மன் பிடக்பேர்க் நியா, ஐ.நா. சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வதிவிட பிரதிநிதி அசூஸா குபோடா, ஐ.நா. சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே ப்ரேச் உள்ளிட்டோரும் இம் மாநாட்டில் உரையாற்றினர்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர்களான அலி சப்ரி, பவித்ரா வன்னியாரச்சி, மஹிந்த அமரவீர, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க, கீதா குமாரசிங்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, வலுசக்தி அமைச்சின் செயலாளர் யூ.கே.மாபா பத்திரன உள்ளிட்ட வர்களோடு உயர்ஸ்தானிகள், தூதுவர்கள், பல்கலைக்கழக வேந்தர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். (03)


யாழில்
முதல் முறையாக
சிறு கைத்தொழில் முயற்ச்சியாளர்களின்
கொண்டாட்டம்
Tourism
Northern Province
இணைந்து வழங்குவோர்
NCI
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
CCIY
UNITY IS STRENGHT
happymarket.lk
அல்லங்காடி
கொண்டாட்டம்
அனுசரணையாளர்
synamon global
JANASHAKTHI Life
Orient Finance
ஒவ்வொரு
சனிக்கிழமைகளிலும்
04:00PM - 10:00PM
யாழ் கோட்டை
(பண்ணை சுற்றுவட்டம்)
NGO Partner
Sustainability Partner
World Vision
SMILE Zone
CCH
IDEA FACTORY
THE SOCIAL INNOVATIONS LAB
ஊடக அனுசரணை
ஒழுங்கமைப்பாளர்
காலைக்கதிர் Kalaikkathir
BirdFather
More Social More Business
happymarket.lk
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்